# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (05.05.2018 முதல் 09.05.2018)

அறிக்கைஎண் 35/2018

தேதி:04.05.2018

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 42°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 22°செ முதல் 25°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைஈரோடு (05.05.2018 முதல் 09.05.2018)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 முதல் 85 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 50 முதல் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | மேகமூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 05.05.18 | 10 | 36 | 25 | 5 | 85 | 55 | 10 | தென்மேற்கு |
| 06.05.18 | 3 | 36 | 25 | 5 | 85 | 55 | 10 | தென்மேற்கு |
| 07.05.18 | 10 | 36 | 24 | 5 | 80 | 50 | 10 | தெற்கு |
| 08.05.18 | 12 | 36 | 24 | 5 | 80 | 50 | 10 | தெற்கு |
| 09.05.18 | 20 | 36 | 24 | 5 | 80 | 50 | 10 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை வேர்பகுதிகளில் தேக்கும் வகையில் தென்னை மரங்களைச்சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுக்கவும்.
- ✓ மஞ்சள் நடுவதற்கு வயல் தயார் செய்ய இதுவே உகந்த காலமாகும். எனவே விவசாயிகள் வயலை உழவு செய்து பண்படுத்தி வைக்கவும்.
- ✓ கடந்த வாரம் மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி பயிர் செய்யப்படாத நிலங்களில் கோடை உழவு செய்து களை மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்தவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ மஞ்சள் நடுவதற்கு வயல் தயார் செய்ய இதுவே உகந்த காலமாகும். எனவே விவசாயிகள் வயலை உழவு செய்து பண்படுத்தி வைக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.